Teacher Reflection

# விளையாடுவோம் வாங்க

பாடம் : 2, வகுப்பு: 3, தமிழ்

**பாடமும் பாடநோக்கமும்:**

எழிலன் தான் பங்கெடுத்த உள்ளூர் விளையாட்டுப் போட்டியைப் பகிர்ந்து கொள்வது போன்றப் பாடம். போட்டி எப்படி நடத்தப்படுகிறது. விழா நடைபெறும் விதம், அங்கு நடைபெறும் நிகழ்வுகளைப் பற்றி இப்பாடம் விளக்குகிறது.

சொற்களஞ்சியம் பெருக்குதல், விளையாட்டுகளைப் பற்றி அறிதல், உரையாடுதல், குழுவேலையில் ஈடுபடுதல், எழுதுதல் ஆகிய நோக்கங்களை உள்ளடக்கியுள்ளது.

**செயல்பாடு 1:**

விளையாடப்புடிக்குமா? என்று உரையாடலைத் துவங்கினேன். எல்லோரும் புடிக்கும் என்பதுபோல் கத்தி பதில் கூறினர். எங்க விளையாடுவீங்க? என்று என் அடுத்த கேள்வியைக் கேட்டேன். சேர்ந்து சொல்லாமல் ஆளுக்கொரு பதிலாக சொல்லும்படி கேட்டேன். “வீட்டில், வெளியில், வாசப்படியில, விளையாடுற இடத்துல, மரத்தடியில, தண்ணியில, கடற்கரையிலஞ்” என்று கூறினர். அடுத்தக் கேள்வி, உங்களுக்குத்தெரிந்த விளையாட்டின் பெயர்களைக் கூறுங்கள், நொண்டி, பந்தெள, கல்லு, சில்லு, கைப்பந்து, கபடி, கண்ணாமூச்சி, ஓடி புடிச்சி, கொக்கோ, ஒளிஞ்சி விளையாட்டு, மூக்குக்கில்லி, ஐஸ்பால்,ஞ்” என அடுக்கிக் கொண்டே சென்றனர்.

**செயல்பாடு 2:**

- அவர்களுக்குப் பிடித்த விளையாட்டின் பெயர்களை எழுதுதல். தவளை ஓட்டம் வரைதல்ஞ் என்பதுபோன்ற செயல்பாடுகளைக் கொண்ட பயிற்சித்தாளை வழங்கினேன். சில குழந்தை பத்திற்கு மேற்பட்ட விளையாட்டுகளின் பெயர்களை எழுதினர். பலர் மூன்று மட்டும் எழுதியிருந்தனர். சிலர் எழுதவேஇல்லை. எழுத முடியாதவர்களுக்கு எழுத்துத் தெரியாத பிரச்சனையைப் பற்றி யோசிக்க வேண்டியிருக்கிறது. அது போல் தவளை ஓட்டம் வரைக! என்று கேட்டதற்கு பல குழந்தைகள் நிஷத்தவளை ஓடுவது போல் வரைந்திருந்தனர். பாடத்தில் இடம்பெறும் தவளை ஓட்டம் இதுவரை அவர்கள் விளையாண்டதும் இல்லை பார்த்ததும் இல்லை. அதனால் நிஷத்தவளை ஓடுவதுபோல் பலர் வரைந்திருந்தனர்.

**செயல்பாடு 3: விளையாட்டுகள் பற்றிய உரையாடல்:**

இரண்டு மூன்று தலைப்புகளில் உரையாடல் மேற்கொண்டோம்.

**விளையாட்டிற்கான விதிமுறைகள் :**

விதிமுறைகள் என்று கெட்டபொழுது அவர்களுக்குப் புரியவில்லை. ரூல் என்று கேட்டதும் பேசத் துவங்கினர்.

ஜெயிக்கனும் என்பதை ரூலாக ஒரு மாணவன் துவங்கினான். ஜெயிப்பது ரூல் என மாணவன் புரிந்திருப்பது சரியா / தவறா? என்ற குழப்பத்தை என்னுள் ஏற்படுத்தியது. நான் அந்தக்கேள்வியிலிருந்து சற்று நகர்ந்து, அது அவர்களுக்குப் புரியும்படியாக விளையாட்டில் நாம் என்னெல்லாம் செய்யனுமோ அதுதான் ரூல். ஓடிப்புடிச்சி விளையாட்டில் ஓடிப்போய் தப்பிக்கனும். அது ஒரு ரூல். இப்பொழுது ஏதேனும் ஒரு விளையாட்டின் பெயரை சொல்லுங்கள் என்று கேட்டேன். கண்ணாமூச்சி என்றனர். கண்ணாமூச்சி விளையாட்டிற்கான ரூல் என்னென்ன என்றேன். எல்லாரும் சேர்ந்து கண்மூடுபவரை தேர்ந்தெடுக்கனும்.

- பிடிப்பவர்கள் 1,2,3,4...100 வரை எண்ணவேண்டும்
- ஒளிபவர்கள் ஒளிந்துகொள்ளவேண்டும்.
- மறைவாக இருப்பவர் அவுட்டாகாமல் அந்த இடத்தைத் தொட வேண்டும்.
- அவுட் ஆனவர் அடுத்து புடிக்கப் போகனும்.

இதுபோல் அடுத்தத் இரண்டு விளையாட்டின் ரூலைப் பற்றி பேசியதோடு. ரூல் என்பது விதிமுறை என பேசி முடித்தோம்.

உரையாடலுக்கான அடுத்த தலைப்பு அவர்கள் விளையாடிய விளையாட்டுகளைப் பற்றி பேசுவது:

- **மாணவி**: நாங்கள் கல்லு விளையாட்டு விளையாடுவோம். அதுக்கு அஞ்சு கல் வேணும். மணியடித்ததும் சீக்கிரமா சாப்பிட்டுட்டு விளையாடுவோம். நானும் என் ஃப்ரண்டும் எதிர் எதிரில் உட்கார்ந்துகொண்டு விளையாடுவோம். நானும் ஷெயிப்பேன்.
- எனக்கு நொண்டி விளையாட்டு புடிக்கும்.

ரெண்டு குழு பிரிஞ்சி விளையாடுவோம்.

பேசுவதற்குக் குறைவே இல்லாமல் பேசினார்கள். முறைப்படுத்தி சொல்லவும், அடுத்தடுத்த நிகழ்வுகளை சொல்வதிலும் சிக்கல்கள் இருந்தது. இதுபோன்ற பயிற்சிகளை அடிக்கடி செய்யும்பொழுது அவர்களுக்கு அது பழகிப்போகலாம்.

இதன் தொடர்ச்சியாக சில விளையாட்டுப் பாடல்களைப் பாடினோம். தாத்தா தாத்தா மணி எத்தனை?, கொலக் கொலையா முந்திரிக்காஞ் போன்ற பாடல்களை மகிழ்ச்சியாகப் பாடினார்கள்.

**செயல்பாடு:4**

**பாடத்தை வாசித்தல்:**

புத்தகத்தைத் திறக்க சொல்லி, பாடத்தை நான் வாசித்தேன். அவர்கள் கை வைத்துக் கேட்டார்கள். ஒவ்வொரு வாக்கியத்தை வாசித்ததும் நிறுத்தி அர்த்தம் கேட்டேன். கதை போல் சொன்னார்கள். அடுத்து நான் படிக்கும்பொழுது கவனித்துக்கொண்டே வந்தார்கள். அவர்களைத் தாங்களாகவே படி என்று கூறியபொழுது, எல்லோரும் எழுத்துக்கூட்டி வாசித்தனர்.




**செயல்பாடு 6:**

மாணவர்களை மைதானத்திற்கு அழைத்துச் சென்று விளையாடவைத்தேன். ஒவ்வொரு விளையாட்டையும் போட்டியாக நடத்த முயற்சித்தோம். வகுப்பறையில் நாங்கள் யோசித்தபடி செய்ய முடியவில்லை.

**செயல்பாடு: 7**

- புதுவார்த்தைகளை வாசித்தல்

புது வார்த்தைகளின் அகரமுதலி

**எதிர்ச்சொல்**

ஆகியனவற்றை புரிந்துகொள்ளவும் பயிற்சியில் ஈடுபடுத்தவும் செய்தேன்.


**சி. தமிழ்ச்செல்வி,**
தொபஆ, அ.தொ.ப காலாப்பேட்